Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered
Sessions

Case No. **S.C. No.1 of 2025**

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW17(LW23)** |
| Name | : திரு. மகேந்திரன் |
| Father's Name | : கந்தசாமி |
| Village | : தருமபுரி |
| Taluk | : தருமபுரி |
| Calling | : காவல் உதவி ஆய்வாளர் |
| Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.12.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் தற்போது சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு தருமபுரியில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.11.2024ம் தேதி மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 08.00 மணிக்கு பென்னாகரம் வட்டம், பென்னாகரம் சமத்துவபுரத்தை சார்ந்த முனிராஜ் மனைவி பெருமாளி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று மகேந்திரமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.121/2024 சட்ட பிரிவு 103 BNSS ஆக வழக்கு பதிவு செய்து

முதல் தகவல் அறிக்கையின் அசலை வாதியின் புகாருடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் பாலக்கோடு அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் முதல் தகவல் அறிக்கையின் நகல் ஒன்றை மேல் புலன் விசாரணைக்காக மாரண்டஹள்ளி காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.11**. மாரண்டஹள்ளி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)

நான் 15.10.2025ம் தேதி முதல் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு தருமபுரியில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். வழக்கில் சாட்சிகளை விசாரிக்கும்போது நானும் திறந்த நீதிமன்றத்தில் உடன் இருந்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு இறந்த நபரை யார் முதலில் பார்த்தார்கள் என்ற விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். இறப்பு செய்தி புகார் கொடுப்பதற்கு முன்பு எனக்கு தெரியும். காவல் நிலையத்தில் நான் இரவு பணியில் இருந்தபோது இறப்பு செய்தி தெரிந்தது. சம்பவ இடத்திற்கு சம்பவ தேதியன்று நான் செல்லவில்லை, காவல் நிலையத்தில் இருந்த காவலர்கள் சென்றார்கள். இறந்தவரின் மனைவி பெயர் சுகன்யா. புகார் கொடுப்பதற்கு முன்னர் சுகன்யாவை நான் நேரில் பார்க்கவில்லை. சுகன்யா காவல் நிலையத்தில் அன்று இருந்தார் என்றும் வழக்கிற்கு ஏற்றவாறு தயாரிக்க வேண்டும் என்பதற்காக காலம் தாழ்த்தி புகார் மனு பெற்று முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்தேன் என்று சொல்வது சரியல்ல. புகாரை புகார்தாரரின் சகோதரி மகன் விஜய் சொல்ல சொல்ல எழுதியதாக திறந்த நீதிமன்றத்தில் சாட்சி விஜய் சொன்னபோது நான் சரியாக கவனிக்கவில்லை. சாட்சி என்ன சாட்சியம் அளிக்கிறார் என்பதை பார்க்கவில்லை. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும் பின்னிட்டு புகாரை காவல் ஆய்வாளர் சொன்னதற்கு ஏற்ப முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியை குற்றவாளியாக காண்பிக்க ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புகாரில் என்ன தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரை பதிவு செய்யும்போது புகாரில் உள்ள மேற்குறிப்பில் குற்ற எண் குறித்த விவரங்கள் எழுதப்பட்டும் பின்பு நேரம் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் நேரம் மட்டும் குறிப்பிட்டு எழுதப்படவில்லை. இந்த வழக்கில் புகாரை மட்டும் வாங்கி வழக்கு பதிவு செய்தேன், வேறு எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 02.12.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C
Date: 2025.12.02 14:45:14 +0530
Principal Sessions Judge,
Dharmapuri.